ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

=====================================================================================

## அறிவுரை 34. அன்னப்புள் போல் ஸாரம் கொள்.

ஸாரமான விஷயங்களை மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

अनन्तपारं बहु वेदितव्यम् अल्पश्च कालो बहवश्च विघ्नाः।
यत् सारभूतं तदुपाददीत हंसो यथा क्षीरमिवाम्बुमिश्रम् ।।

அநந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பஶ்ச காலோ பஹவஶ்ச விக்நா: |
யத் ஸாரபூதம் தது பாததீத ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம் ||

என்கிற ச்லோகத்தில் सारभूतं என்கிற பதத்தாலே ப்ரதிபந்நமான निरुपाधिकसारத்தை

- முனிவாஹனபோகம்

தெரிந்து கொள்ளவேண்டியவற்றில் மிகத்தேவையானதை மட்டும் கிரகிப்பது நல்லது. இதைச் சொல்லும் உத்தரகீதைச் சுலோகம் ஒன்றை மேற்கோளாகக் காட்டி அருளிய வாக்கியம்:

அறியவேண்டியதோ கரைகாணாதபடி ஏராளமானது. காலமோ மிகக் குறைவு. தடங்கல்களோ நிறைய. எது ஸாரமானதோ அதைக் கிரகிக்கவேண்டும். ஹம்ஸபக்ஷி நீர் கலந்த பாலிலிருந்து பாலை மட்டும் கிரகிப்பது போல.

அன்னப்பறவைக்கு ஒரு தனித்திறமை இருக்கிறது. பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலைமட்டும் பிரித்தெடுத்துப் பருக அதனால் முடிகிறது. நீரை மிச்சம்

**வைத்து விடுகிறது. நமக்கு வேறோரிடத்தில் இந்தமாதிரித் திறமை தேவை. அஸாரமான பல வித்யைகளின் நடுவே ஸாரதமமான பகுதியும் கலந்து கிடக்கும்போது மற்றவற்றை ஒதுக்கிவிட்டுத் தேவையான ஸாரதமத்தை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும். மொத்தக் கல்வியையும் கற்க முயல்வது வீண். அது ஸாத்தியமில்லை. குவிந்துள்ள பாடங்கள். குறுகிய காலம். இடையிடையே இடைஞ்சல்கள். அல்பஸாரங்களையெல்லாம் வேண்டாமென்று தள்ளுங்கள். மிக மிக ஸாரமானதை மட்டும் கொள்ளுங்கள்.**

****************